மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25ம் நாள் திங்கள்கிழமை
இடைநிலை மனு எண்.08/2024
இன்
அசல் வழக்கு எண்.14/2019
-------

1. வள்ளியம்மாள்
2. ராதாகிருஷ்ணன்
3. சண்முகவேல்
4. ரவிச்சந்திரன் .. மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ஜெயலட்சுமி
2. கிருஷ்ணம்மாள்
3. உடையார்
4. முருகன்
5. கதிர்வேல்
6. காளியம்மாள்
7. முத்துமாரி .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 11.08.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. வெள்ளையராஜா அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 மற்றும் 7, 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. முருகன், அவர்கள் ஆஜராகியும், 6ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக இருந்து வரும் நிலையிலும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது கடந்த 09.08.2024ம் தேதி மனுதாரர்கள்/வாதிகள் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் மேற்படியார்கள் தாக்கல் செய்த பிராதை

தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்து மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட வேண்டி கட்டளை 9 விதி 9 பிரிவு 151 உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்</u>–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 2ம் வாதி. 1ம் வாதி மனுதாரரின் அம்மா. மற்ற வாதிகள் மனுதாரரின் சகோதரர்கள் ஆவார்கள். மனுதாரர் இவ்வழக்கின் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனுதாரரின் அம்மாவின் உடன் பிறந்த சகோதரர்களின் வாரிசுகள் ஆவார்கள். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளிடம் மனுதாரர் தாவா சொத்தை அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை இடையூறு செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக் கட்டளை வழங்க கோரியும், 2 முதல் 8 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் கட்டாய விசாரணைக்காக 09.08.2024ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரர் வெளியூரில் வேலை செய்து கொண்டிருந்ததாலும் அவரது வழக்கறிஞரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில் இருந்ததாலும் நீதிமன்றத்திற்கும், வழக்கறிஞருக்கும் தகவல் தெரிவிக்க இயலவில்லை. அதனால் இந்நீதிமன்றம் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டது. மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து மேற்படி வழக்கில் பிராதை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்டம் நஷ்டம் ஏற்படக்கூடியதாய் உள்ளது. எனவே மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள் மற்றும் வாதங்களை கேட்டறிந்தால் மட்டுமே இந்த வழக்கின் சரியான நீதியை நிலை நாட்ட முடியும். எனவே மனு தாக்கல்.

3. **<u>1 முதல் 5 மற்றும் 7, 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபணையின் சுருக்கம் –</u>**

3.1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் வழக்கின் பொருண்மைபடிக்கும் செல்லத்தக்கதல்ல. மேற்படி மனுவில் கோரியுள்ளது போல் யாதொரு பரிகாரமும் மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல. இதனடியில் வியக்கமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகள் யாவும் பொய் மற்றும் தவறு என்று மறுக்கப்படுகிறது. தாவா மனுவானது முறையாக தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர்/2ம் வாதி வெளியூரில் வேலை செய்து வந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், எந்த ஊரில் வேலை பார்த்து வந்தார், என்ன வேலை பார்த்து வந்தார். எந்த தேதியில் அவரது தரப்பு வழக்கறிஞரை தொடர்பு கொண்டார் என்ற விவரம் ஏதும் தாவா மனுவில் குறிப்பிடப்படவில்லை. மேலும் மற்ற வாதிகளுக்கு வழக்கு பற்றிய விவரம் தெரியுமா, அவாகள் தரப்பில் வழக்கறிஞரை தொடர்பு கொண்டனரா இல்லையா என்ற விவரம் ஏதும் மனுவில் குறிப்பிடப்படவில்லை.

**3.2.** மேற்படி வழக்கில் மொத்தம் நான்கு நபர்கள் வாதிகளாக இருந்து வருகிற சூழ்நிலையில், மேற்படி நான்கு நபர்களில் எவரையேனும் ஒருவரை அழைத்து வழக்கு விசாரணையை தொடங்கியிருக்கலாம். அது தவிர்த்து, இந்த் மனுதாரர்/2ம் வாதி வெளியூர் சென்றுவிட்டார் என்று காரணம் கூறியிருப்பது தாவா மனுவை தாக்கல் செய்வதற்காக கூறியிருப்பதாக தெரிய வருகிறது. மேலும் மேற்படி வழக்கானது 21.06.2019ம் தேதி ஏற்கனவே வாதிகள் தரப்பில் 6ம் பிரதிவாதிக்கு தொடர்ந்து சம்மன் அனுப்ப முயற்சி செய்யாத காரணத்தினால், தாவா வழக்கில் Dismissed for Default உத்தரவு பிறப்பித்திருந்தது. அதனைத் தொடர்ந்து தற்போது 2வது முறையாக மேற்படி வாதிகளுக்கு எதிராக Dismissed for Default உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**3.3.** வாதிகள் தரப்பில் தாவா வழக்கின் காலத்தை நீட்டிக்க செய்யவே

இதுபோன்ற செயல்களில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர். மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள அபிடவிட் மற்றும் மனுவின் குறுந்தலைப்பு முறையாக தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் அந்த ஒரு காரணத்திற்காகவும் தாவா மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யும் பதிலுரையை ஏற்று, மனுதாரர்கள் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப் படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** **தீர்வு**

6.**1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 2ம் வாதி. கடந்த 09.08.2024ம் தேதி மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை என்பதால் அவர்கள் தாக்கல் செய்த பிராதை தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்து மேற்படி வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், மனுதாரர் அன்றைய தினம் வெளியூரில் வேலை செய்து கொண்டிருந்ததாலும், வழக்கறிஞரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில் இருந்ததாலும், அசல் வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது. மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்காவிட்டால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்டம் நஷ்டம் ஏற்படக் கூடியதாய் உள்ளது. மேலும் மனுதாரர் பக்கம் நல்ல கட்சி உள்ளது. எனவே மனு தாக்கல்.

**6.2.** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ஆட்சேபணையில் மனுதாரர் வெளியூரில் வேலை செய்து வந்ததாக கூறப்பட்டுள்ள நிலையில், எந்த ஊரில், என்ன வேலை பார்த்து வந்தார் என்றும், எந்த தேதியில் வழக்கறிஞரை தொடர்பு

கொண்டார் என்றும் மனுவில் குறிப்பிடப்படவில்லை. மேற்படி வழக்கில் நான்கு நபர்கள் வாதிகளாக உள்ள நிலையில் எவரையேனும் ஒருவரை அழைத்து வழக்கு விசாரணையை தொடங்கியிருக்கலாம் என்று காரணம் கூறியிருப்பது தாவா வழக்கின் காலத்தை நீட்டிக்க செய்யவே இதுபோன்ற செயல்களில் தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் குறுந்தலைப்பு முறையாக தாக்கல் செய்யப்படவில்லை எனவே எதிர்மனுதாரர்களின் பதிலுரையை ஏற்று மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** மனுதாரர் 09.08.2024ம் தேதி வெளியூரில் வேலை செய்து கொண்டிருந்ததாலும், வழக்கறிஞரை சந்திக்க இயலாத காரணத்தினாலும் மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் மனுதாரர் எந்த ஊரில், என்ன வேலை பார்த்தார், வழக்கறிஞரை எப்போது தொடர்பு கொண்டார் என்பது பற்றிய விவரங்களை மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை. மேற்படி வழக்கில் நான்கு வாதிகளாக இருந்து வருகிற சூழ்நிலையில், மேற்படி நபர்களில் எவரையேனும் ஒருவரை அழைத்து வழக்கு விசாரணையை தொடங்கி இருக்கலாம் என்று காரணம் கூறியிருப்பது தாவா வழக்கினை நீட்டிக்க வேண்டுமென்று தாக்கல் செய்துள்ளதாக எதிருரையில் குறிப்பிட்டுள்ளார். இருந்த போதிலும் வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**<u>7. இறுதி முடிவு–</u>**

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, **2025 ஆம்**

**ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25–ம்** நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை.

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்
இ.ம.எண்.08/2024
இன்
அ.வ.எண்.14/2019
**உத்தரவு**
நாள்–25.08.2025.